தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2042, ஆவணி 1

2011 ஆகஸ்ட் 18, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

*"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்."*

என் குடிமக்களை உயர்த்துவேன் என்று மிகுந்த மன உறுதியுடன் முயற்சி செய்யும் ஒருவருக்கு, தெய்வமே வரிந்து கட்டிக்கொண்டு உதவி செய்வதற்காக அவர் முன் வந்து நிற்கும்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) நீக்கச் சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) நீக்கச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

*** மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) நீக்கச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

* **திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்-விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டத்தை நீக்கம் செய்வதற்கான இந்தச் சட்டமுன்வடிவை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்து பதிவு செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்-விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டத்தை நீக்குவதற்கு முன்மொழியப்பட்டிருக்கிற இந்தச் சட்டமுன்வடிவை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் detail ஆகப் பேசாதீர்கள். அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன் என்று சொல்லுங்கள்.

திரு. எம். ஆறுமுகம்: அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன் என்பதைப் பதிவு செய்துகொள்ளவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை நானும் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

2011 ஆகஸ்ட் 18]

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கின்றேன்.*

2. மானியக் கோரிக்கைகள், 2011-2012, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 14—எரிசக்தித் துறை

(ஆ) கோரிக்கை எண் 44—சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

(இ) கோரிக்கை எண் 27—தொழில் துறை

} தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2011–2012 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும். 17–8 2011 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீதான விவாதத்திற்குப் பதிலுரை மற்றும் வாக்கெடுப்பு. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காற்று தனக்காக வீசுவது இல்லை; கடல் தனக்காக வாழ்வது இல்லை; நதிகள் தனக்காக ஓடுவது இல்லை; மலர்கள் தனக்காக மலர்வது இல்லை; கனிகள் தனக்காக காய்ப்பது இல்லை; வானம் தனக்காகப் பொழிவது இல்லை. அதேபோல, எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும் (மேசையைத் தட்டும் ஒலி) தனக்காக வாழாமல், தமிழ்நாட்டு மக்களுடைய நலனுக்காகவும், ஒட்டுமொத்த உலகத் தமிழர்களின் நலனுக்காகவும் (மேசையைத் தட்டும் ஒலி) தன்னையே அர்ப்பணித்து, தியாகத் தலைவியாக விளங்கிக் கொண்டிருக்கின்ற எங்களுடைய உயிரினும் மேலான தலைவி அம்மா அவர்கள், மொத்தத்தில் எங்களுக்கு வழிகாட்டுவதோடு நிற்காமல், வாழ்ந்து காட்டுகிற தலைவியாகவும், வரலாற்றுத் தலைவியாகவும் விளங்கிக் கொண்டிருக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*